
**நவம்பர் – 01**

# TNPSC துளிகள்

- வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆனது, ஐக்கியப் பேரரசிற்கு கர்நாடகா மற்றும் தமிழ்நாட்டிலிருந்துப் புவிசார் குறியீடு பெற்ற இண்டி மற்றும் புளியங்குடி எலுமிச்சை சரக்குகளை முதன்முறையாக விமானம் மூலமாக ஏற்றுமதி செய்துள்ளது.
- பயணிகள் கப்பலான 'சிந்து' இந்தியாவின் ஒரே செயலில் உள்ள எரிமலையான பாரன் தீவிற்கான தனது முதல் பயணத்தை நிறைவு செய்து, அந்தமானில் போர்ட் பிளேயரில் உள்ள ஹாடோ வார்ஃப் துறைமுகத்திற்கு திரும்பியது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தன் தானிய திட்டத்தின் விரிவாக்கம்




- தமிழ்நாட்டில் நான்கு மாவட்டங்கள் (இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி மற்றும் விருதுநகர்) ஆகியவை பிரதான் மந்திரி தன் தானிய கிரிஷி யோஜனாவின் கீழ் சேர்க்கப் பட்டுள்ளன.
- விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்தப் பலன்களை வழங்குவதற்காக இந்தத் திட்டத்தின் கீழ் 36 அரசு திட்டங்கள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.
- இதில் பங்கேற்கும் மாவட்டங்களைச் சேர்ந்த கிருஷி விஞ்ஞான மையங்களின் (வேளாண் அறிவியல் மையங்கள்) தலைவர்களுடன் ஒரு மறுஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது.

## குறுவை சாகுபடி நெல் கொள்முதல்

- 2025-26 ஆம் ஆண்டின் 'குறுவை' சாகுபடி பருவத்தில் தமிழ்நாடு மொத்தம் 11.21 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்தது.

- 1,45,634 விவசாயிகளுக்கு அவர்களின் விளைபொருட்களுக்காக மாநில அரசு 2,709 கோடி ரூபாயை செலுத்தியது.
- காவிரி டெல்டா மாவட்டங்களிலிருந்து தினமும் 30,000 டன்களுக்கும் அதிகமான நெல் கொள்முதல் செய்யப்பட்டு பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது.
- நெல் சேகரிப்புக்காக என இந்த மாநிலம் முழுவதும் மொத்தம் 1,872 நேரடி கொள்முதல் மையங்கள் (DPC) திறக்கப்பட்டன.




# தேசியச் செய்திகள்


## 8வது மத்திய ஊதிய ஆணையம்

- 8வது மத்திய ஊதிய ஆணையத்திற்கான குறிப்பு விதிமுறைகளை மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.
- முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் இந்த ஆணையத்திற்குத் தலைமை தாங்க உள்ளார்.
- இதில், பெங்களூருவின் இந்திய மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் பேராசிரியர் புலக் கோஷ் உறுப்பினராக (பகுதி நேரம்) உள்ளார்.
- மத்தியப் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சக செயலாளர் பங்கஜ் ஜெயின் இதன் உறுப்பினர்-செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் சலுகைகளில் மாற்றங்களை ஆராய்ந்து பரிந்துரைப்பதற்காக இந்த ஆணையம் அமைக்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அறிவிக்கப்பட்ட இந்த ஆணையம், அது அமைக்கப் பட்ட 18 மாதங்களுக்குள் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும்.
- பொருளாதார நிலைமைகள், நிதிச் சீரமைப்பு, ஓய்வூதியப் பொறுப்புகள், மாநில நிதி மற்றும் தற்போதைய ஊழியர் ஊதியங்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 8வது CPC பரிந்துரைகளை வழங்கும்.
- 8வது மத்திய ஊதிய ஆணையப் பரிந்துரைகள் பொதுவாக 01.01.2026 ஆம் தேதியில் இருந்து வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- 7வது ஊதிய ஆணையமும் 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் வெளியிடப்பட்டது, ஆனால் ஊழியர்களுக்கு 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆறு மாத காலத்திற்கு நிலுவைத் தொகை வழங்கப் பட்டது.




## இரண்டாம் கட்டத் தேர்தல் பட்டியல் திருத்தம்





- இந்திய தேர்தல் ஆணையம் (ECI) ஆனது 12 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் (UTs) வாக்காளர் பட்டியலைத் திருத்த உள்ளது.
- இறுதி வாக்காளர் பட்டியல்கள் 2026 ஆம் ஆண்டு பிப்ரவரி 07 ஆம் தேதியன்று வெளியிடப் படும்.
- இதில் தமிழ்நாடு, மேற்கு வங்காளம், கேரளா, புதுச்சேரி, உத்தரப் பிரதேசம், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத், கோவா, சத்தீஸ்கர், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மற்றும் லட்சத்தீவுகள் ஆகிய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் இதில் அடங்கும்.
- ஆதாரை அடையாளச் சரிபார்ப்புக்கு பயன்படுத்தலாமே தவிர, வயது அல்லது

குடியுரிமைக்கான சான்றாகப் பயன்படுத்த இயலாது.

- இது வாக்காளர் பட்டியல்களின் சிறப்புத் தீவிரத் திருத்தத்தின் 2 ஆம் கட்டமாகும்.
- இதன் முதல் கட்டம் ஜூன் 24 அன்று மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950 என்பதின் பிரிவு 21(3) இன் கீழ் மற்றும் வாக்காளர் பதிவு விதிகள், 1960ன் கீழ் அறிவிக்கப்பட்டது.

## பசுமை சார் சுத்திகரிப்பு நிலையம்




- பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட் (BPCL) மற்றும் ஆயில் இந்தியா லிமிடெட் (OIL) ஆகியவை ஆந்திரப் பிரதேசத்தின் இராமாயப்பட்டினம் துறைமுகத்திற்கு அருகில் ஒரு பசுமை சார் (எந்தவித மேம்பாட்டு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலத்தில்) சுத்திகரிப்பு நிலையத்திற்கான ஒத்துழைப்பு குறித்து ஆராய்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- 1 லட்சம் கோடி முதலீட்டில் அமைக்கப்பட முன்மொழியப்பட்ட சுத்திகரிப்பு நிலையம் மற்றும் பெட்ரோ வேதியியல் வளாகம் ஆனது 9–12 மில்லியன் டன் கொள்ளளவில் சுத்திகரிக்கும் திறன் கொண்டது.
- இராமாயப்பட்டினம் மையத்தில் தென்னிந்தியாவில் முதல் முறையாக, ஆண்டிற்கு 1.5 மில்லியன் டன் (MTPA) அளவிலான திறன் கொண்ட, 35% பெட்ரோ வேதியிய செறிவுடன் கூடிய எத்திலீன் உடைப்பு அலகு உள்ளது.
- 2030 ஆம் நிதியாண்டில் இதன் வணிக நடவடிக்கைகள் தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகின்றன என்பதோடு மேலும் இந்த மையம் எரிசக்தி பாதுகாப்பு, தொழில்துறை மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை அதிகரிப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மின்னணுத் திட்டங்கள்

- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் ஆனது 7 தனியார் மின்னணுக் கூறு உற்பத்தித் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இதற்கான மொத்த முதலீடு 5,532 கோடி ரூபாயாகும்.
- ஐந்து திட்டங்கள் தமிழ்நாட்டிலும், தலா ஒன்று மத்தியப் பிரதேசம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்திலும் நிறுவப்பட உள்ளன.
- கெய்ன்ஸ் சர்க்யூட்ஸ் இந்தியா நிறுவனமானது அச்சிடப்பட்ட மின்சுற்றுப் பலகைகள், ஒளிப்படக் கருவி தொகுதியின் துணை நிலை ஒருங்கு சேர்ப்புக் கூறுகள் மற்றும்

தகடுகளை உருவாக்க 3,280 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது.

- தமிழ்நாட்டில் அச்சிடப்பட்ட மின்சுற்றுப் பலகைகள் (PCB) உற்பத்தி மையத்தினை உருவாக்க அசென்ட் சர்க்யூட்ஸ் நிறுவனம் 991 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது.
- இந்தத் திட்டங்கள் உள்நாட்டு உற்பத்தி மற்றும் மதிப்புக் கூட்டலை அதிகரிப்பதற்கான மின்னணுக் கூறு உற்பத்தித் திட்டத்தின் ஒரு பகுதியாகும்.




# சர்வதேசச் செய்திகள்

## ஜப்பானில் யென் ஸ்டேபிள்காயின்




- ஜப்பானின் புத்தொழில் நிறுவனமான JPYC, யென் உடன் முழுமையாக இணைக்கப் பட்ட உலகின் முதல் ஸ்டேபிள்காயினை வெளியிட உள்ளது.

- இந்த ஸ்டேபிள்காயின் உள்நாட்டு சேமிப்பு மற்றும் ஜப்பானிய அரசாங்கப் பத்திரங்களால் (JGB) ஆதரிக்கப்படுகிறது.
- JPYC என்று பெயரிடப்பட்டுள்ள இதற்கு ஆரம்பத்தில் எந்தப் பரிவர்த்தனை கட்டணமும் இருக்காது.
- வருவாய் ஆனது JGB வருவாய் இருப்பின் மீதான வட்டியிலிருந்து வரும்.
- ஃபியட் நாணயங்களுடன் இணைக்கப்பட்ட ஸ்டேபிள்காயின்கள் வழக்கமான வங்கி முறைகளுடன் ஒப்பிடும் போது வேகமான மற்றும் மலிவான பரிவர்த்தனைகளை வழங்குகின்றன.
- ஜப்பானில் 2010 ஆம் ஆண்டில் 13.2% ஆக இருந்த பணமில்லா கொடுப்பனவுகள் 2024 ஆம் ஆண்டில் 42.8% ஆக உயர்ந்தன.

# பொருளாதாரச் செய்திகள்


## நிதி ஆயோக் அறிக்கை 2025




- நிதி ஆயோக் அமைப்பானது, "India's Services Sector: Insights from GVA Trends and State-Level Dynamics" மற்றும் "India's Services Sector: Insights from Employment Trends and State-Level Dynamics" என்ற தலைப்பிலான இரட்டை அறிக்கைகளை வெளியிட்டுள்ளது.
- சேவைகள் சார்ந்த வளர்ச்சியைப் புரிந்து கொள்வதற்கு தேசிய மற்றும் மாநில அளவில் மொத்த மதிப்புக் கூட்டல் (GVA) மற்றும் வேலைவாய்ப்பு போக்குகளை இந்த அறிக்கைகள் ஆய்வு செய்கின்றன.
- 2024–25 ஆம் ஆண்டில் இந்தியாவின் தேசிய GVA மதிப்பில் சுமார் 55 சதவீதப் பங்களித்த சேவைத் துறையானது வளர்ந்து வரும் பிராந்திய ஒருங்கிணைப்பைக் காட்டுகிறது.
- நவீன உயர் உற்பத்தித்திறன் பிரிவுகளில் வேலைவாய்ப்புகள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே உள்ளதால், சேவை துறைகளில் வேலைவாய்ப்பு சீரற்றதாகவே உள்ளது, மேலும் வழக்கமான துறைகள் பெரும்பாலும் முறைசாரா மற்றும் குறைந்த ஊதியம் வழங்குபவையாக உள்ளன.
- குறிப்பிட்ட மாநிலம் சார்ந்த உத்திகள் மற்றும் பிராந்திய சேவை மையங்களுடன் டிஜிட்டல் உள்கட்டமைப்பு, தளவாடங்கள், நிதி, புதுமை, திறன் மேம்பாடு மற்றும் முறைப்படுத்தலை மேம்படுத்த இந்த அறிக்கைகள் பரிந்துரைக்கின்றன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## மென்பொருட்களால் நிர்ணயிக்கப்பட்ட வானலைகள்




- இந்திய இராணுவமானது பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி அமைப்பினால் (DRDO) உருவாக்கப்பட்டு பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட் (BEL) நிறுவனத்தினால் தயாரிக்கப் பட்ட மென்பொருளால் நிர்ணயிக்கப்பட்ட வானலைகளை / ரேடியோக்களை (SDR) வாங்க உள்ளது.
- இந்த SDR பாதுகாப்பான, நிகழ்நேரத் தகவல்தொடர்புக்காக உயர் தரவு விகிதங்கள் மற்றும் மைய அணுகல் முனையம் அல்லாத வலையமைப்பு (MANET) திறன்களைக் கொண்டுள்ளன.
- தகவல்களைச் சார்ந்த, வலையமைப்பினை மையமாகக் கொண்ட போர்க்களங்களில் SDR-கள் இராணுவத்தின் செயல்பாட்டுத் தயார்நிலையை மேம்படுத்தும்.

## SJ-100 விமானம்




- இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (HAL) மற்றும் ரஷ்யாவின் யுனைடெட் ஏர் கிராஃப்ட் கார்ப்பரேஷன் (UAC) ஆகியவை SJ-100 பொதுப் பயன்பாட்டுப் பயணிகள் விமானத்தைத் தயாரிப்பதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- SJ-100 என்பது இரட்டை எஞ்சின், குறுகிய கட்டமைப்பு கொண்ட விமானமாகும் என்பதோடு இதில் 200க்கும் மேற்பட்டவை ஏற்கனவே தயாரிக்கப்பட்டு 16க்கும் மேற்பட்ட வணிக ரீதியான விமான நிறுவனங்களால் இயக்கப்படுகின்றன.

- இந்த ஒப்பந்தத்தின் கீழ், உள்நாட்டு வாடிக்கையாளர்களுக்காக SJ-100 விமானங்களை உற்பத்தி செய்யும் உரிமை HAL நிறுவனம் கொண்டிருக்கும் என்பதால், அது அவற்றை முழுமையாக இந்தியாவிலேயே உற்பத்தி செய்யும்.
- 1961 முதல் 1988 ஆம் ஆண்டு வரையிலான HAL நிறுவனத்தின் AVRO HS-748 திட்டத்திற்குப் பிறகு இந்தியாவில் தயாரிக்கப்படும் முதல் முழுமையான பயணிகள் விமானம் இதுவாகும்.
- அடுத்தப் பத்து ஆண்டுகளில், பிராந்தியப் போக்குவரத்து இணைப்புக்காக இந்தியாவிற்கு 200க்கும் மேற்பட்ட ஜெட் விமானங்களும், இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திற்கு கூடுதலாக 350 விமானங்களும் தேவைப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## க்ரோகிபீடியா தரவுத் தளம்





- எலோன் மஸ்க்கின் செயற்கை நுண்ணறிவு நிறுவனமான xAI, க்ரோகிபீடியா எனப்படும் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் இயங்கலை வழி தகவல் தரவுத் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- விக்கிபீடியாவைப் போன்ற பயனர் இடைமுகம் கொண்ட இந்தத் தளமானது, பயனர்கள் குறிப்பிட்ட தலைப்புகளைத் தேட, பாடங்களை ஆராய, துணைப் பிரிவுகளுக்குச் செல்ல மற்றும் மேற்கோள் காட்டப்பட்ட அறிக்கைகளை மதிப்பாய்வு செய்ய அனுமதிக்கிறது.
- உரிமம் பெற்ற படங்கள், பல் ஊடகக் கூறுகள், தொடர்புடைய தலைப்புகளுக்கான ஹைப்பர்லிங்க்குகள், தகவல் வரைபலகைகள் மற்றும் வெளிநாட்டு மொழி சார் கட்டுரைகள் தற்போது க்ரோகிபீடியாவில் கிடைக்கப்பெறவில்லை.
- க்ரோகிபீடியா ஒரு திறந்த, இலவசமான மூலமாகும் என்பதோடு, மேலும் பயனர்கள் புதியக் கட்டுரைகளைச் சேர்த்தல், திருத்தங்கள் அல்லது நீக்குதல்களைக் கோரலாம்.

## முதல் முப்பரிமாண காற்று வேக தரவு செயற்கைக்கோள் வலையமைப்பு

- ஹாங்காங்கில் உள்ள ஸ்டெல்லரஸ் டெக்னாலஜி எனும் புத்தொழில் நிறுவனமானது முப்பரிமாண காற்று வேகத் தரவுகளுக்கான உலகின் முதல் செயற்கைக்கோள் வலை அமைப்பான ஃபீலியன் செயற்கைக்கோள் தொகுப்பை நிலைநிறுத்த உள்ளது.
- இந்தச் செயற்கைக்கோள் தொகுப்பானது காற்றின் வேகம், திசை மற்றும் செங்குத்து இயக்கத்தை உலகளவில் மணி நேர, கிலோமீட்டர் அளவிலான தெளிவுத் திறனில் அளவிடும்.

- வானிலை கண்காணிப்பு பலூன்கள், விமானம் மற்றும் செயற்கைக்கோள்களை நம்பியிருக்கும் தற்போதைய அமைப்புகள் ஆனது தொடர்ச்சியற்ற அல்லது முழுமை அற்ற முப்பரிமாண காற்று வேகத் தரவை மட்டுமே வழங்குகின்றன.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டமிடல், விமானப் பாதுகாப்பு, பேரிடர் மேலாண்மை மற்றும் காப்பீட்டு மாதிரி ஆகியவற்றை மேம்படுத்துவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## 2025 ஆம் ஆண்டின் சிறந்த சுற்றுலா கிராமங்கள்




- உலகெங்கிலும் உள்ள 52 கிராமங்கள் 2025 ஆம் ஆண்டிற்கான "சிறந்த சுற்றுலா கிராமங்கள்" என்று அதிகாரப் பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
- அவை ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு போன்ற

பல்வேறு புவியியல் பகுதிகளைச் சேர்ந்தவையாகும்.

- 2025 ஆம் ஆண்டின் இப்பட்டியலில், எந்த இந்தியக் கிராமங்களும் சேர்க்கப்படவில்லை.
- முந்தைய ஆண்டுகளில், தெலுங்கானாவில் உள்ள போச்சம்பள்ளி மற்றும் குஜராத்தில் உள்ள தோர்டோ ஆகியவை ஐ.நா. சபையினால் அங்கீகரிக்கப்பட்டன.
- இந்த முன்னெடுப்பு ஆனது, ஐ.நா. சுற்றுலா அமைப்பினால் (முன்னர் ஐ.நா. உலக சுற்றுலா அமைப்பு) 2021 ஆம் ஆண்டில் அதன் "கிராமப்புற மேம்பாட்டிற்கான சுற்றுலா" திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## நெல்லி படுகொலை 1983

**Nellie: 'Memoricide' Of A Massacre**

In February 1983, around 1800 Bengali-speaking Muslims were killed in Nellie, Assam, in one of the bloodiest massacres in post-Independence India

- 1983 ஆம் ஆண்டு நெல்லி படுகொலை குறித்த திவாரி ஆணையத்தின் அறிக்கையை மாநில சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய அசாம் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- வெளிநாட்டினருக்கு எதிரான அசாம் கிளர்ச்சியின் போது 2,000க்கும் மேற்பட்டோர், பெரும்பாலும் புலம்பெயர்ந்த முஸ்லிம் பெண்கள் மற்றும் குழந்தைகள் கொல்லப் பட்டனர்.
- நீதிபதி திரிபுவன் பிரசாத் திவாரி தலைமையிலான ஆணையம் ஆனது 1984 ஆம் ஆண்டில் தனது அறிக்கையை சமர்ப்பித்தது, ஆனால் அது ஒருபோதும் வெளிப்படுத்த / பகிரங்கப்படுத்தப்படவில்லை.
- நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அறிக்கையை தாக்கல் செய்வது வெளிப்படைத் தன்மையை உறுதி செய்யும் என்றும் மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்யும் என்றும் அசாம் முதல்வர் கூறினார்.

## திட்டம் 2031 – கேரளா

- கேரள முதல்வர் திட்டம் 2031 ஆவணத்தை வெளியிட்டார்.
- 50 பில்லியன் டாலர் பொருளாதார உற்பத்தியை அடைவதையும் 500,000 உயர் மதிப்பு மிக்க வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும் மாநில அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நான்கு உத்தி சார் திட்டங்கள் தொடங்கப்பட்டன:
    - கேரள செயற்கை நுண்ணறிவுத் திட்டம் (K-AIM)

- கேரள குறைக்கடத்தி உற்பத்தி திட்டம்
- கேரள எதிர்கால தொழில்நுட்பத் திட்டம் (KFTM)
- தி ஃபியூச்சர் கார்ப்பரேஷன் (TFC).

❖ 2030 ஆம் ஆண்டிற்குள் 1,000,000 குடிமக்களுக்கு செயற்கை நுண்ணறிவில் பயிற்சி அளிக்கவும், கேரள AI உரிமைகள் மசோதாவை அறிமுகப்படுத்தவும் அம்மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

❖ இயங்குபடம், ஒலி ஒளி, விளையாட்டு மற்றும் கேளிக்கைச் சித்திரம் (AVGC) துறையில் 250 நிறுவனங்களை நிறுவவும், அனைத்து அரசு சேவைகளையும் முழுமையாக டிஜிட்டல் முறையில் வழங்குவதையும் கேரளா நோக்கமாகக் கொண்டுள்ளது.




# விளையாட்டுச் செய்திகள்

## ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழக வெற்றியாளர்கள்



- பஹ்ரைனில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மகாராஜன் ஆறுமுக பாண்டியன் மற்றும் எட்வினா ஜேசன் ஆகியோர் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- கோவில்பட்டியைச் சேர்ந்த பளுதூக்குதல் வீரர் மகாராஜன் ஆறுமுக பாண்டியன் ஆடவருக்கான 60 கிலோ எடைப் பிரிவில் இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றார்.
- திருநெல்வேலியைச் சேர்ந்த ஓட்டப்பந்தய வீரர் எட்வினா ஜேசன் இந்திய அணியின் ஒரு பகுதியாக 400 மீட்டர் ரிலேவில் ஒன்று மற்றும் மெட்லி ரிலேவில் மற்றொன்று என இரண்டு வெள்ளிப் பதக்கங்களை வென்றார்.

# முக்கிய தினங்கள்

## காலாட்படை தினம் 2025 – அக்டோபர் 27




- இந்திய இராணுவத்தின் முதுகெலும்பான காலாட்படையின் துணிச்சல், தியாகம் மற்றும் சேவையை கௌரவிப்பதே இந்த நாளின் நோக்கமாகும்.
- 1947 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பிந்தைய இராணுவ நடவடிக்கையின் முதல் நிகழ்வைக் குறிக்கும் வகையில் இந்தத் தினம் முதன்முதலில் 1948 ஆம் ஆண்டில் கொண்டாடப் பட்டது.
- ஜம்மு-காஷ்மீர் இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிறகு பாகிஸ்தான் படை எடுப்பாளர்களை விரட்ட இந்தியக் காலாட்படைப் பிரிவுகள் ஸ்ரீநகரில் நிலை நிறுத்தப் பட்டதை நினைவு கூரும் நாள் இதுவாகும்.

## டிஸ்லெக்ஸியா விழிப்புணர்வு மாதம் 2025 - அக்டோபர்

- டிஸ்லெக்ஸியா/ வாசிப்புத் திறன் குறைபாடு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல், ஆரம்பகால கண்டறிதலை ஊக்குவித்தல் மற்றும் கல்வி மற்றும் பணியிடத்தில் உள்ளடக்குதல் போன்ற நடைமுறைகளை ஊக்குவித்தல் இந்த மாத அனுசரிப்பின் நோக்கமாகும்.
- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் 06 ஆம் தேதியன்று திங்கள் கிழமை (அக்டோபர் 6–12) தொடங்கும் முழு வாரமும் டிஸ்லெக்ஸியா விழிப்புணர்வு வாரமாக நியமிக்கப் பட்டு

உள்ளது.

- உலக டிஸ்லெக்ஸியா தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 08 ஆம் தேதியன்று அன்று அனுசரிக்கப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Raising the Volume" என்பதாகும்.




## இந்திய கடல்சார் வாரம் 2025





- 2025 ஆம் ஆண்டின் இந்திய கடல்சார் வாரம் ஆனது அக்டோபர் 27 முதல் 31 ஆம் தேதி வரை மும்பையில் அனுசரிக்கப்பட்டது.
- இது துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய துறைமுகச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்த வார அனுசரிப்பின் கருத்துரு, "Uniting Oceans, One Maritime Vision" என்பதாகும்.

## உலக பக்கவாதம் தினம் 2025 - அக்டோபர் 29

- பக்கவாத அபாயங்கள் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிப்பது, ஆரம்பக் கட்ட அறிகுறிகளை அடையாளம் காண்பது மற்றும் சரியான நேரத்தில் மருத்துவ நலனை வழங்குவதை ஊக்குவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பக்கவாதம் என்பது உலகளவில் மரணத்திற்கு வழிவகுக்கும் இரண்டாவது முக்கிய காரணமாகவும், இயலாமைக்கு வழிவகுக்கும் மூன்றாவது முக்கிய காரணமாகவும் உள்ளது.
- இந்தியாவில், 100,000 மக்கள்தொகைக்கு சுமார் 145 பேர் என்ற பாதிப்பு விகிதத்தில்

ஆண்டுதோறும் சுமார் 18 லட்சம் பேர் பக்கவாதத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

- இந்த நாள் 2004 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதியன்று கனடாவின் வான்கூவரில் நடைபெற்ற உலக பக்கவாத மாநாட்டில் நிறுவப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Every Minute Counts" என்பதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★